**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**
**<u>அசல் வழக்கு எண்</u>.254/2015**

பெயர்-திருமதி. ரேவதி நாள்.11.07.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : 1, 3, 4, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

**1.** 1ம் வாதி சுப்பம்மாள் எனக்கு தாய், 3ம் வாதி எனது சகோதரி, நான் 6ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். நான் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து இக்கரை தத்தப்பள்ளியில் 7 ஏக்கர் 32 செண்ட் உள்ளதாகும். தாவா சொத்து 3 பகுதிகளாக உள்ளது. ஒவ்வொரு பகுதியும் எவ்வளவு ஏக்கர் என தனிதனயாக எனக்கு தெரியாது. ஒவ்வொரு பகுதிக்கும் நான்முக எல்லைகள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது வயது 65 ஆகும், நான் தாவா சொத்திற்கு சென்றதில்லை என்றால் சரியல்ல நான் போயிருக்கிறேன். 3 பகுதிகளில் ஒரு பகுதி நிலத்தில் வாழை விவசாயம் செய்கிறார்கள். மற்ற பகுதியில் ஒன்றில் விவசாயவதில்லை மற்றொரு பகுதியில் விவசாயம் செய்வது வருகிறார்கள். 3 பகுதிகளில் ஒரு பகுதியில் உள்ள பூமியில் இரண்டு வீடுகள் உள்ளது.

2. அந்த வீடுகளில் எனது அம்மாவின் சித்தப்பா மகன் இரண்டு பேர் குடியிருக்கிறார்கள். எனது சித்தப்பா பெயர் கெம்பண்ணகவுடர், சித்தப்பா காலத்திலிருந்து அந்த பூமியில் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். எனது சித்தப்பா மகன் 1ம் பிரதிவாதி நஞ்சையா அந்த வீட்டை கட்டினார். அந்த வீடுகள் காண்ரீட் வீடுகள் மாத்தி கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வீடுகள் எந்த ஆண்டு கட்டினார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் அந்த பக்கம் போகவில்லை. தாவா சொத்தில் வீடு கட்டியதை நானோ எனது தாயாரோ தடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை எனது அம்மாவிடமிருந்து பத்திரம் எழுதி வாங்கிகொண்டதால் தரமுடியாது என்று என மறுத்தார்கள், அதனால் இவ்வழக்கு தாக்கல் செய்தேன்.

3. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 எனது தாயார் மற்றும் எனது அம்மாவின் அம்மா மாதம்மாள் எழுதி கொடுத்த ஆவணம் என்றால் சரிதான் . ஆனால் அதில் உள்ள கையெழுத்து என் அம்மா உடையதல்ல. நான் தாவா சொத்தில் 2014 ல் பாகம் கேட்டேன். எனது அம்மாவின் அப்பா பெயர் நஞ்சைய கவுடர், நஞ்சையகவுடரும், கெம்பண்ணகவுடரும் சகோதரர்கள் என்றால் சரிதான். நஞ்சையகவுடர் காலமாகி 75 வருடங்கள் இருக்கும். நஞ்சையகவுடர் இறந்த பிறகு கெம்பண்ணகவுடர் பொருப்பில் விடப்பட்டு விவசாயம்

செய்துவந்தார். மாதம்மாள் இறந்து 15 வருடங்கள் இருக்கும். மாதம்மாள் உயிருடன் இருக்கும் போது பாகம் கேட்டார்கள் என்றால் இல்லை. எனது அம்மாதான் மாதம்மாள் உயிருடன் இருக்கும் போது பாகம் கேட்டார்கள். அவர் பாகம் கேட்டு 45 வருடங்கள் இருக்கும் என்றால் சரிதான். கெம்பண்ணகவுடர் மறுத்தப்போது மாதம்மாள் வழக்கு போட தயாராகி விட்டார்கள் என்றால் சரிதான். மாதம்மாள் கெம்பண்ணகவுடர் வைத்து ஊரில் பைசல் பேசினார் என்றாலும் அவர்களுக்கு ஈடாக ரூ.5000 பணத்தை பெற்றுக்கொண்டு வா.சா.ஆ.1 விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தால் சரியல்ல. குத்தகைக்கு பணம் மட்டும் தான் கொடுத்தார்கள். குத்தகை தொகை எவ்வளவு அதற்கு கொடுத்த ஆவணம் என்ன என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 விடுதலைப் பத்திரம் ஏற்பட்ட காலத்திலிருந்து எனக்கும் தாவா சொத்திற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. கடந்த 45 ஆண்டுகளாக அறுவடையில் பங்கோ, பணமோ வாங்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 -ன் வழக்கறிஞர் அறிவிப்பில் எதனடிப்படையில் சொத்துவிவரம் எழுதினோம் என்றால், பத்திர அலுவலகத்தில் வா.சா.ஆ.1 விடுதலை ஆவணத்தின் நகல் எடுத்து தெரிந்துகொண்டோம். வழக்கறிஞர் அறிவிப்புக்கு முன்பு விடுதலை ஆவணம் பற்றி எனக்கு தெரியாது என வழக்குரையில் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரியல்ல.

4. வா.சா.ஆ.1 ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தபோது, ஆவணத்தின் இறுதியில் ஆவணம் தயார் செய்யப்பட்ட தேதி, பதிவு துறையின் முத்திரை உள்ள தாளை நீக்கிவிட்டோம் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1 -ல் முத்திரைத்தாள்கள் வாங்கிய தேதிகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1ன் நகல் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டு, தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் வா.சா.ஆ.1ன் அசல் ஆவணமாகும் என்றால், சரிதான். ஆனால், அதில் எனது அம்மாவின் கையொப்பம் வேறுவிதமாக உள்ளது. எனது அம்மாவின் கையொப்பம் வா.சா.ஆ.1ல் போலியாக போடப்பட்டிருந்தால் நாங்கள் உரிய சட்ட நடவடிக்கை எடுத்திருப்போம் என்றாலும், எனது அம்மாவின் உண்மையான கையொப்பம் என்பதால்தான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால், சரியல்ல.

5. எனது, வழக்குரையில் வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் எனது அம்மாவின் உடையது என கட்சிசெய்யவில்லை என்றால், சரியல்ல. தாவா சொத்தின் பட்டா முதலான

வருவாய்துறை ஆவணங்களை நான் பார்த்ததில்லை என்றால், சரிதான். அதனால் வழக்குரையில் சொன்னவாறு கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாக கூறியிருப்பது உண்மையல்ல என்றால் சரியல்ல. அதற்கான நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் எனது தாயார் கையொப்பம் இருப்பதால் நாங்கள் கட்டியுள்ள நீதிமன்ற கட்டணம், நீதிமன்ற மதிப்பீடு தவறானது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் வழக்குரை மற்றும் வா.சா.ஆ-1ன் சொத்துவிவரத்தில் பொதுவில் என காட்டப்பட்டுள்ளதால், பொதுவான நபர்கள் யார்யார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. தாவா சொத்து விவரத்தில் ஏக்கரில் 7.32 எனவும், ஹெக்டேர் கணக்கில் கூட்டாக 09.43.0 ஏர்ஸ் என மதிப்பு உள்ளது என்றாலும், அதன் ஏக்கர் மதிப்பில் 23.29 செண்ட் அளவு வரும என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. உண்மையில் எனக்கு சொத்துவிவரமே தெரியாது என்றால், சரியல்ல. கடந்த 31.08.2017-ல் பிரதிவாதிகளுக்குள் பாகப்பிரிவினை பத்திரம் ஏற்பட்டுள்ளது என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. தாவா சொத்தில் உண்மையில் எனக்கு பாகம் இருந்திருந்தால், 31.08.2017 பாகப்பத்திரம் செல்லாது என நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால், சரியல்ல. உண்மையில் எனக்கு பாகம் இருந்திருந்தால் நஞ்சையகவுடர், கெம்பண்ணகவுடர் இறந்தவுடன் உரிய காலத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், பாகம் இல்லாததால்தான் காலம்கடந்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல. 1980-ம் ஆண்டிலேயே ரூ.5,000/-ம் தக்க பிரதிபிரயோஜனம் பெற்றுக்கொண்டு விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்துவிட்டதால் எனது வழக்கு காலவரையறை சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.தாவா பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.07.11 17:13:40 +0530

District Munsif